# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## II-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

## SUPPLEMENT TO PART II OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 5, 1924.

ந. 6.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1924-ம் ௵ பிப்ரவரி ௴ 5௳. [விலை, 6 பை.


# ABKARI NOTICE.

1924–25-ம் ௵த்திற்காக மதராஸ் டவுனிலுள்ள ஆப்காரி அபினி சுதந்தரங்களை விற்பனை பண்ணுவதைப்பற்றிய நோட்டீஸ்.

1924-ம் ௵ எப்ரல் ௴ 1௳ முதல் 1925-ம் ௵ மார்ச்சு ௴ 31௳ யுடன் முடிவாகிற இஜாராவுக்கு மதராஸ் டவுனிலுள்ள அடியில் கண்டிருக்கும் பட்டைசாராயக்கடைகளும் டாவர்ன்களும், கஞ்சா, அபினிக்கடைகளும் மதராஸ் கலெக்டரவர்களால், அவர்களுடைய ஆபீஸில் 1924-ம் ௵ பிப்ரவரி ௴ 12, 13௳ பகல் 12 மணிமுதல் ஏலம் போடப்படும்:—

## ஷெட்யூல் I.—பட்டைசாராயக்கடைகள்.

| கடை நெம்பர். | கடைகளின் எல்லைகள். |
|---|---|
| 1. | புது வண்ணாரப்பேட்டை, திருவத்தியூர் ஐரோடு, அருணாசல ஈஸ்வரன்பேட்டை அம்மன் கோவிலுக்கும் வெங்கிடகிருஷ்ணன் தெருவுக்கும் மத்தியில் 200 கெஜம். |
| 2. | இராயபுரம் மன்னார்சாமி கோவில் தெரு, போலீஸ் ஸ்டேஷனுக்கும் 60-ம் நம்பர் வீட்டிற்கும் மத்தியில் 200 கெஜம். |
| 3. | பழைய வண்ணாரப்பேட்டை திருவத்தியூர் ஐரோட்டில் கல்லறை ரோட்டுக்கும் வெங்கடகிருஷ்ணன் தெருவுக்கும் மத்தியில். |
| * 4. | பெரம்பூர், பெரம்பூர் ஐரோடு, ரெயில்வே ஸ்டேஷனுக்கும் பறச்சேரிக்கும் மத்தியில். |
| 5. | ஜியார்ஜ்டவுன் சாலைவிநாயகர் தெரு, பிருட்வேக்கும் ராமசாமி தெருவுக்கும் மத்தியில். |
| 6. | ஜியார்ஜ்டவுன் தாதா முத்தியப்பன் தெரு, கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் தங்கசாலை தெருவுக்கும் மத்தியில். |
| 7. | ஜியார்ஜ்டவுன் ஏழுகிணற்று தெரு, அம்மன்கோவில் தெருவுக்கும் சென்ட் ஜேவியர் தெருவுக்கும் மத்தியில் 217 கெஜம். |
| 8. | ஜியார்ஜ்டவுன் ஆனைகவுனி முருகப்பன் தெரு, ஒத்தவாடை ரோட்டுக்கும் கந்தப்பமுதலி தெருவுக்கும் மத்தியில் 83 கெஜம். |
| 9. | சிந்தாதரிப்பேட்டை கூவம் ஆத்துரோட்டில் சாமிநாயக்கன் தெருவுக்கும் அருணாசல நாயக்கன் தெருவுக்கும் மத்தியிலாவது அல்லது அருணாசல நாயக்கன் தெருவில் செண்ட் ஆண்ட்ரூஸ் வாராவதிக்கும் கிழவ செட்டி தெருவுக்கும் மத்தியில் எங்கேயாகிலும். |
| * 10. | சூளை அவதானம் பாப்பையர் தெருவிலிருக்கும் முனிசிபல் வண்டிதொட்டிக்கும் தர்மராஜா கோயிலுக்கு எதிரில் சூளைக்கடை ரோட்டிலிருந்து பிரியும் புதுக்கடைத் தெருவுக்கும் மத்தியில். |
| | (குறிப்பு.—சூளை பஜார் ரோட்டில் டிராம் வண்டி ஓடுகிற புறத்தில் கடையை வைக்கக்கூடாது.) |
| * 11. | புரசவாக்கம் வெங்கடேச சமாதி தெரு. |
| 12. | டேரியமெட்டு இருசப்பன் தெருவில் எங்கேயாவது 110 கெஜம் நிகளம். |

## ஷெட்யூல் I.—பட்டைசாராயக்கடைகள்—தொடர்ச்சி.

| கடை நெம்பர். | கடைகளின் எல்லைகள். |
|---|---|
| 13. | புதுப்பேட்டை—வடக்கு, ஆரிஸ் ரோடு ஆரிஸ் வாராவதியிலிருந்து மதராஸ் ஸிட்டி போலீஸ் எட்குவார்ட்டர்ஸ் குதிரை லேன்ஸ் வரையில்; கிழக்கு, கூவம் ரோடு; தெற்கு, கூவம் ரோடு; மேற்கு, வேலாயுத செட்டி தெரு, ஆரிஸ்ரோட்டிலிருந்து கூவம் ரோட்டு வரையில். கடை மேல்கண்ட எல்லைக்குள் ஆக்ஷேபணையில்லாத இடத்தில் வைக்கப்படவேண்டுமேயொழிய கமிசேரியட் லேன்சுக்கு அருகிலாவது, ஆரிஸ் ரோட்டுக்காவது, கூவம் ரோட்டுக்காவது அல்லது வேலாயுத செட்டி தெருவின் வடமூனைக்கு 50 கஜத்துக்குள்ளாவது வைக்கக்கூடாது. |
| 14. | நுங்கம்பாக்கம் அகஸ்தீஸ்வரன் கோவில் தெரு அல்லது வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம் ஐரோட்டுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் மத்தியில். |
| 15. | திருவல்லிக்கேணி திருவட்டீசுவரன்பேட்டை ரோடு, ஆறுமுக செட்டி தெருவுக்கும் அருணாசல ஆசாரி தெருவுக்கும் மத்தியில் 100 கெஜம். |
| 16. | திருவல்லிக்கேணி, புலிபோன் பஜார் வாணியன் தெருவில் எங்கேயாவது. |
| 18. | ராயப்பேட்டை ஐரோடு, பழைய போலீஸ் ஸ்டேஷனுக்கும் பீடர்ஸ் ரோட்டுக்கும் மத்தியில் 210 கெஜம். |
| 19. | தேவனாம்பேட்டை மவுண்ட்ரோடு, ஆர்டிகல்ச்சரல் தோட்டத்திற்கு அருகாமையிலிருக்கும் வாராவதிக்கு தெற்கே 200 கெஜத்திற்குள். |
| 20. | மைலாப்பூர், கச்சேரி ரோடு, பஜார் ரோட்டு, அருண்டெல் தெரு, இவைகளில் ஆக்ஷேபணையில்லாத எங்கேயாவது ஒரு இடத்தில். (இந்தக் கடையை டிராம் லையனுக்கு அப்புறம் வைக்க வேண்டும்). |

## ஷெட்யூல் II.—டாவர்ன்கடைகள்.

| கடை நெம்பர். | கடைகளின் எல்லைகள். |
|---|---|
| 1. | ராயபுரம் பிரண்டன் பஞ்சு பிரஸ் ரோட். |
| 2. | ஜியார்ஜ்டவுன் ஏழுகிணற்று தெரு, ஆணக்காரகோணன் தெருவுக்கும் அம்மன்கோவில் தெருவுக்கும் மத்தியில். |
| 3. | ஜியார்ஜ்டவுன் ஆதியப்ப நாயக்கன் தெரு, தங்கசாலை தெருவுக்கும் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் மத்தியில். |
| 4. | ஜியார்ஜ்டவுன் நயினியப்ப நாயக்கன் தெரு அல்லது மிமோரியல் ஹால் வடக்கு தெரு, மிமோரியல் ஹாலுக்கும் ராசப்பசெட்டி தெருவுக்கும் மத்தியில். |
| 5. | புரசவாக்கம் மூக்காத்தாள் தெருவில், கல்லறைக்கும் புரசவாக்கம் ஐரோட்டுக்கும் மத்தியில். |
| 6. | வேப்பேரி ஐரோடு, பார்க்கு கேட்டுக்கும் பெரியண்ண மேஸ்திரி தெருவுக்கும் மத்தியில். |
| 7. | எழும்பூர் ஐரோடு, எழும்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்கும் தபாலாபீசுக்கும் மத்தியில். |
| 8. | மவுன்ட் ரோடு, ரவுண்ட் டாணுவுக்கும் மவுன்ட் ரோட்டுக்கும் நீலன்துரை பிரதிமைக்கும் மத்தியில். |
| 9. | திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடு, வீராகவ முதலி தெருவுக்கும் திருவல்லிக்கேணி ஐரோட்டுக்கும் மத்தியில் 200 கெஜம் தூரம். |
| 10. | மைலாப்பூர் கச்சேரி ரோடு, அரண்டல் தெருவுக்கும் கடைத்தெருவுக்கும், கடைத்தெரு முழுவதிற்கும் மத்தியில். |

## ஷெட்யூல் III.—கஞ்சாக்கடைகள்.

| கடை நெம்பர். | கடைகளின் எல்லைகள். |
|---|---|
| 1. | ஜியார்ஜ்டவுன் மண்ணடி தெரு, மூர் தெருவுக்கும் அய்யப்ப செட்டி தெருவுக்கும் மத்தியில். |
| 2. | ஜியார்ஜ்டவுன் சைனாபஜார் ரோடு, தங்கசாலை தெருவுக்கும் இருசப்பமேஸ்திரி தெருவுக்கும் மத்தியில். |
| 3. | வண்ணாரப்பேட்டை திருவத்தியூர் அயிரோட், கல்லரைரோட்டுக்கும் ராமானுஜ அய்யர் தெருவுக்கும் மத்தியில். |
| 4. | சூளைக்கடைரோட்டில் டிமலோஸ்ரோட்டில் எங்கேயாவது. |
| 5. | திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ்ரோடு, பக்கிர்சாயப்பு தெருவுக்கும் வீராகவ முதலி தெருவுக்கும் மத்தியில். |

## ஷெட்யூல் IV.—அபினிக்கடைகள்.

| கடை நெம்பர். | கடைகளின் எல்லைகள். |
|---|---|
| 1. | பழைய வண்ணாரப்பேட்டை, திருவத்தியூர் ஐரோடு, கல்லறை ரோட்டுக்கும் வரதா கிருஷ்ணம தெருவுக்கும் மத்தியில். |
| 2. | ஜியார்ஜ்டவுன் வரதா முத்தியப்பன் தெரு, ஆதியப்ப நாயக்கன் தெருவுக்கும் அண்ணா பிள்ளை தெருவுக்கும் மத்தியில் அல்லது ஆதியப்ப நாயக்கன் தெருவில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கும் வாதா முத்தியப்பன் தெருவுக்கும் மத்தியில். |
| 3. | பாரக்ஸ் கேட் தெருவில் எங்கேயாவது அல்லது டிமலோஸ் ரோட்டில் பாரக்ஸ் கேட் தெருவுக்கும் சூளை ஸ்லாட்டர் அவுசுக்குப்போகும் சந்திற்கும் மத்தியில். |
| 4. | திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி ஐரோடு (கிழக்கு)க்கும் அமீர்மஹால் (மேற்கு)க்கும் மத்தியில். |

**குறிப்பு.**—(1) எலம் நடந்துகொண்டிருக்கையில் எவருடைய எலத்தொகை விலை எற்றுக்கொள்ளப்படுகிறதோ அவர் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தர் உத்தரவுபண்ணும்பட்சத்தில் உடனேயும், இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்தில் முதலில்கட்டும் டேவணி இரண்டுமாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய ஒவ்வொரு கடைக்கும் எலம் கேட்கிறதற்கு கட்டிய டிபாசிட்டுத் தொகை ரூபாய் 50 தவிர அரைமாதத்திய குத்தகைத்தொகை டேவணியாக செலுத்தவேண்டியது. அப்படி கட்டாவிட்டால் அவர் கட்டிய டேவணித்தொகை அவரால் இழந்துவிடப்பட்டு, அந்த கடை மேற்சொல்லிய நிபந்தனைகளை அனுசரித்து உடனே எலம் போடப்படும், அல்லது கலெக்டரால் வேறே எவ்விதமாயாவது வினியோகஞ்செய்யப்படும். அப்படி டேவணி கட்டத்தவறினவன் அதே கடைக்காவது அல்லது வேறு எந்த கடைக்காவது எலத்தில் மறுபடியும் விலை கேட்பதற்கு யோக்கியதையில்லாதவராய்விடுவார்.

(2) மேற்கண்ட ஷெட்யூல்களில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள், யாதொரு ஆக்ஷேபனையில்லாத இடத்தில்தான், எலத்தில் கடை எடுத்தவர்கள் தங்கள் கடைகளை வைத்துக்கொள்ள உத்திரவு கொடுக்கப்படும். தவிர, கடைகள் ஒன்றுக்கொன்று 100 கஜம் தூரத்திற்குள்ளாக இருக்கக்கூடாது.

(3) கடைகளெடுத்தவர்கள் அவரவர் கடைகளை வைத்துக்கொள்வதற்கு தங்களால் நியமிக்கப்பட்ட ஸ்தலத்தின் நான்கெல்லை விஸ்துகளை எலமான ஒரு வாரத்திற்குள்ளாக மதராஸ் டவுன் ஸர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு அனுப்பவேண்டியது. அப்படி நியமிக்கப்பட்ட ஸ்தலங்களுக்கு எக்ஸைஸ் லைஸென்ஸிங் போர்டார் அவர்களின் நிராக்ஷேபனை தெரிந்தவுடன், போர்டார் அவர்களின் எல நோட்டீஸின் நிபந்தனைகளின் முறைமைப்படி உடன்படிக்கைகளை தயார்செய்யவேண்டியது.

(4) எலமெடுத்தவர்கள் தகுமான ஸ்திதியற்றவரென்று கலெக்டர் அவர்களுக்குப் படும் பக்ஷத்தில் உடனே நோட்டீஸ் மூலமாய் அறிவிக்கப்படும். அப்படி நோட்டீஸ் பெற்றவர்கள், தம் தம் கடைகளின் மறு இரண்டுமாத கிஸ்தியை அதிக டேவணியாக உடனே கட்டவேண்டியது; அல்லது கலெக்டர் அவர்களுக்கு திருப்தியான ஜாமீனைக்காண்பித்து, வேண்டிய ஜாமீன் பத்திரங்களை முடித்து ரிஜிஸ்தர் செய்யவேண்டியது. இப்படி செய்வதில் தாமதிப்பவர்களுக்கு லைஸென்ஸு கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்படும்.

(5) விசேஷ காரணங்களிருந்தாலொழிய டெம்பரெரி லைஸென்ஸு கொடுக்கப்படமாட்டாது; அதிலும், வருஷத்திய லைஸென்ஸு கொடுபடாமலிருப்பதற்கு காரணம், லைஸென்ஸுதார் மேற்கண்ட நிபந்தனைகளின்படி செய்யத்தவறியதனுலென்று ஏற்படும்பக்ஷத்தில், அவர்களுக்கு டெம்பரெரி லைஸென்ஸு ஒருக்காலும் கொடுக்கப்படமாட்டாது.

(6) கடை கிஸ்தி செலுத்தவேண்டிய விஷயத்தில் அடியிற்கண்டிருக்கும் விதிகள் அனுஷ்டிக்கப்படும் :—

(i) கடை கிஸ்தி ஒவ்வொரு மாதமும் 10௳ அல்லது அதற்குமுந்திசெலுத்தப்படவேண்டியது.

(ii) அப்படி செலுத்தத்தவறுகிற எல்லா தொகைகளுக்கும் 10௳ முதல் வருஷம் ஒன்றுக்கு 100 க்கு 6 வீதம் வட்டி.யும், கடை ஒன்றுக்கு ரூபாய் 1 அபராதமும் விதிக்கப்படும்.

(iii) மாதாந்திர கிஸ்தி தொகையை அந்தந்தமீ 25௳க்குள் செலுத்தத்தவறினல் கடை மறு எலத்திற்குக் கொண்டுவரப்படும்; அதனுலுண்டாகும் நஷ்டத்தை பழைய லைஸென்ஸுதாரனிடமிருந்து வசூல் செய்யப்படும்.

(7) இந்த * குறிப்பிட்ட கடைகளை மில்லில் வேலை நாள்களில் காலை 11–30 முதல் மாலை 1 மணி வரையிலும், சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் காலை 11–30 முதல் மாலை 1 மணி வரையிலும் சாயரட்சை 4 மணி முதல் 8 மணி வரையிலும், ஞாயிற்றுகிழமை தினங்களிலும் பிரம்பூர் மில் விடுமுறை தினங்களிலும் காலை 11–30 முதல் மாலை 4 மணி வரையிலுள்ள நேரத்தை தவிற பாக்கி காலங்களிலும், மூடிவிடவேண்டியது. மில் விடுமுறை நாட்களாவன :—மஹாளய அமாவாசை, தீபாவளி, நோன்பு, கிரிஸ்மஸ், இங்கிலீஷ் வருஷப்பிறப்பு, பொங்கல், மாட்டுப்பொங்கல், தெலுங்கு வருஷப்பிறப்பு, தமிழ் வருஷப்பிறப்பு, ரம்ஜான், பக்ரீத், முகரம், பிள்ளையார் சதுர்த்தி.

மதராஸ் கலெக்டர் ஆபிஸ்,<br>1924-ம௵ ஜனவரிமீ 24௳. }

எச். ஏ. பி. வெர்னன்,<br>கலெக்டர்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.